**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.3568,3569 and 3886/2023**

Deposition of Witness : PW 3
Name : Vadivel
Father Name : Padavettam
Age : 44 years
Designation : HR Senior Executive

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 22nd day of April, 2025.

---

**முதல் விசாரணை –**

நான் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சென்னை முகப்பேரில் உள்ள Madras Medical Mission மருத்துவமனையில் HR Senior Executive ஆக பணிபுரிகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரி என்று படித்துப்பார்த்து கையொப்பம் இட்டுள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அழைப்பாணை **ம.சா.ஆ.30** ஆகவும், அனுமதி கடிதம் **ம.சா.ஆ.31** ஆகவும், அடையாள அட்டை **ம.சா.ஆ.32** ஆகவும், எழிலரசி என்பவருக்கு எங்கள் மருத்துவமனையிலிருந்து பணியில் சேர வழங்கப்பட்ட Offer Letter **ம.சா.ஆ.33** ஆகவும், Confirmation letter **ம.சா.ஆ.34** ஆகவும் மற்றும் அவருடைய சம்பள சான்றிதழ் **ம.சா.ஆ.35** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் 2006ம் ஆண்டு முதல் மேற்கூறிய மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். ம.சா.ஆ.33 மற்றும் 34 ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ள அதிகாரி நான் அல்ல, எங்கள் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டது. அந்த ஆவணங்களில் கையொப்பம் இட்ட அதிகாரிகளை விசாரித்தால்தான் அதன் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.33 மற்றும் 34 ஆவணங்களில் எழிலரசி என்ற கையொப்பம் செய்துள்ள நபர் இறந்துபோன நபர் அல்ல என்றும், அவர் மருத்துவமனையிலேயே பணிபுரியவில்லை என்றால் சரியல்ல. எங்கள் மருத்துவமனையின் வருகைப்பதிவேடு, சம்பள பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி, சம்பள சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோம். எங்கள் மருத்துவமனை வங்கி கணக்கிலிருந்து இறந்துபோன நபருக்கு சம்பளம் வழங்கப்பட்டது என்பதற்கு வங்கிகணக்கு பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இறந்துபோன நபருக்கு வழங்கப்பட்ட பணிக்கொடை தொடர்பான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்கள் அலுவலகத்தில் உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். உரிய ஆவணங்களுடன் நான்

**சாட்சியம் அளிக்கவில்லை என்றும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் மற்றும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை**

Sd./

Signature of witness

Taken down by me/before me in open Court,
interpreted/read over to the Witness and
admitted by him/her to be correct.
Date: 22.4.2025

Sd./
II Judge
Court of Small Causes, Chennai